Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



அனுப்புநர்

ஜ. கோபால கிருஷ்ணன், B.E.,
நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
திருவள்ளூர் மண்டலம்.
எண்.43/397A, இரண்டாம் தளம்,
அன்னை இந்திரா காந்தி சாலை,
இராஜாஜிபுரம் பகுதி - II,
திருவள்ளூர் - 602 001.
தொலைபேசி - 044-27665657.
emailIDtvlrregion@gmail.com.

பெறுநர்

உறுப்பினர் செயலர் / ஆணையாளர்,
திருவள்ளூர் உள்ளூர் திட்டக் குழுமம் / நகராட்சி,
திருவள்ளூர் வட்டம்,
திருவள்ளூர் மாவட்டம்.

ந.க.எண்.3008/2019/திவம2 **நாள்.09.07.2020.**

ஐயா,

பொருள்: மனைப்பிரிவு - நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் - திருவள்ளூர் மண்டலம் - திருவள்ளூர் மாவட்டம் - திருவள்ளூர் வட்டம் - திருவள்ளூர் உள்ளூர் திட்டப் பகுதி/நகராட்சி - புங்கத்தூர் கிராமம் - சர்வே எண்.607/4 - (வார்டு-B - பிளாக்-17 - ந.அ.எண்.12/3Apt)-ல் 0.60 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. உறுப்பினர் செயலர் / ஆணையாளர், திருவள்ளூர் உள்ளூர் திட்டக் குழுமம் / நகராட்சி அவர்களின் கடிதம், ந.க.எண்.4083/2019/எப்1, நாள்.22.07.2019.
2. மனுதாரர் இணையதள மனு, எண்.201905401012944, நாள்.06.07.2019.
3. அரசாணை (Ms) எண்.71, ஊரக வளர்ச்சித் துறை, நாள்.16.06.2003.
4. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.14619/1988/பிசிசி, நாள்.27.04.1988.
5. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.40483/1990/எல்ஏ1, நாள்.07.11.1992.
6. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.16985/2000/எல்ஏ2, நாள்.29.09.2007.
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7978/2012/எல்ஏ2, நாள்.19.04.2012.
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.12544/2014/சிபி, நாள்.04.07.2014.
9. இவ்வலுவலகக் கடிதம், இதே எண், நாள்.26.02.2020 (சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சி மற்றும் மின்வாரியத்திற்கு ஒப்படைக்க கோரியது).
10. உறுப்பினர் செயலர் / ஆணையாளர், திருவள்ளூர் உள்ளூர் திட்டக் குழுமம் / நகராட்சி அவர்களின் கடிதம், ந.க.எண்.4083/2019/எப்1, நாள்.29.05.2020. (தானப்பத்திர நகல் மற்றும் தீர்மான நகல் பெறப்பட்டது).
11. இவ்வலுவலக கடிதம், இதே எண், நாள்.17.06.2020. (பரிசீலனைக் கட்டணம் மற்றும் நன்னிலைவரி கட்டணம் கோரியது).
12. மனுதாரர், திரு.R.சிவக்குமார் அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள், நாள்.30.06.2020. (பரிசீலனைக் கட்டணம் மற்றும் நன்னிலைவரி கட்டணம் செலுத்தியது).
13. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.13686/2017/LA1, நாள்.08.09.2017.
14. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.12201/2017/Spl.Cell, நாள்.28.09.2017.
15. மேற்பார்வை பொறியாளர்(பொ), காஞ்சிபுரம் மின் பகிர்மான வட்டம் அவர்களின் கடித எண்.மே.பொ/காமிபவ/காஞ்சி/உசெபொ.சிவில்/மு.நி.வரை/கோப்பு.3008/2019/D.No.170/2020, Dated:28.05.2020. (மின்வாரிய ஒதுக்கீடு ஒப்படைப்பு விபரம்)

*****

..2..

1. திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், திருவள்ளூர் உள்ளூர் திட்டப் பகுதி / நகராட்சி, புங்கத்தூர் கிராமம், சர்வே எண்.607/4, (வார்டு-B - பிளாக்-17 - ந.அ.எண்.12/3Apt)-ல் 0.60 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமையும் மனைப்பிரிவு வரைபட ஒப்புதலுக்கு, பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்ட உத்தரவு வழங்கப்படுகிறது.

2. இம்மனைப்பிரிவிற்கு, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு, **ம.வ/ந.ஊ.உ.இ (திவம).எண்.59/2020** என எண்ணிடப்பட்டு, இரண்டு தொகுப்புகள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

3. பார்வை 10-ல் காணும் கடிதம் மூலம் சாலையினை நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதற்கான தானப்பத்திர நகல் மற்றும் தீர்மான நகல் பெறப்பட்டுள்ளது. மேலும், பார்வை 12-ல் கண்ட மனுதாரரின் கடிதம் மூலம், அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய நன்னிலை வரி **ரூ.5,400/- (ரூபாய் ஐந்தாயிரத்து நானூறு மட்டும்)** மற்றும் பரிசீலனைக் கட்டணம் (Scrutiny Fees) **ரூ.4,000/- (ரூபாய் நான்காயிரம் மட்டும்)** செலுத்தப்பட்டதற்கான விவரம் பெறப்பட்டுள்ளது.

4. மேலும், பார்வை 4, 5, 6 மற்றும் 7-ல் சுட்டிய, நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் கடிதங்களில் தெரிவித்துள்ளபடி, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. பார்வை 3-ல் சுட்டியுள்ள அரசாணையின்படி, சாலைகளை மனுதாரரிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெற்றும், சாலைகள், குடிநீர், தெரு விளக்குகள் மற்றும் வடிகால் வசதிகளை செய்து, மனைப்பிரிவு முழுமையாக அபிவிருத்தி செய்து, அதனை நகராட்சிக்கு ஒப்படைத்த பின்னரும், மேலும், மேற்கண்ட அரசாணையில் கண்டுள்ள இதர நடைமுறைகளை பின்பற்றியும் மன்றத்தின் அனுமதி பெற்றும், இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளான 19(இ), 19(உ) குறித்து உறுதி செய்த பின்னரே, ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

6. மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது, மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(ஈ)-ன்படி இவ்வுத்தரவின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

7. The Land Ownership is the responsibility of the local Authority, as per the G.O.Ms No.71, RDLA, Dated:16.06.2003 and this technical approval for the layout is accorded based on the land ownership certificate furnished by the executive authority.

8. பார்வை 10-ல் கண்ட கடிதம் மூலம் பெறப்பட்ட இணைப்புகளில் உள்ளவாறு நகராட்சி மன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனைப்பிரிவு சாலைகள் இடத்தினை தனி புல உட்பிரிவு பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

9. உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகள், உள்ளூர் திட்டக் குழுமம் / நகராட்சியால் தெரிவிக்கப்படும் சாலையின் அகலம், அதன் உயரம் மற்றும் தரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளதா? என்பதை சம்பந்தப்பட்ட ஆணையாளர் அவர்களால் ஆய்வு செய்து, சாலையின் நிலை குறித்த தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னரே, நகராட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

10. நகராட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5 / 6

சிறப்பு நிபந்தனைகள் :

1. பார்வை 8-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.12544/2014/சிபி, நாள்.04.07.2014-ன் சிறப்பு நிபந்தனையில், "நகர் ஊரமைப்புத் துறை சட்ட பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம், விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், சுத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் (மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

2. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால், அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல".

3. பார்வை 13-ல் காணும் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி, உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி, வருவாய் துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. பார்வை 14-ல் காணும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதத்தில், "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department, Dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority".

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், 9/7/2020
திருவள்ளூர் மண்டலம்.

9.7.2020

இணைப்பு :
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் (2 நகல்கள்).

நகல் :
1. திரு.R.சிவக்குமார்,
எண்.23, காமராஜர் சாலை,
திருவள்ளூர் - 602 001.

2. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை-02
அவர்களுக்கு மனைப்பிரிவு வரைபடம் மற்றும்
மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

3. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம்.
மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள்.

திருவள்ளூர் உள்ளூர் திட்டக் குழுமம் / நகராட்சி.

நகல் எண்.3008/2019/திவம2

மனைப்பிரிவு நிபந்தனைகள்

1. அ. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு, **ம.வ/ந.ஊ.உ.இ.(திவம).எண்.59/2020** என எண்ணிடப்பட்ட வரைபடத்தின்படி, எல்லைக் கற்கள் வரையறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவுக்குள் வரும் தெருக்கள் அனைத்தும், ஊராட்சி கட்டிட விதிகள் 3(5)-ன்படி ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளுக்கேற்ப, சரளைக் கற்களைக் கொண்டு மனுதாரரால் திருவள்ளூர் நகராட்சி, ஆணையாளரால் (Commissioner) நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும், அகலத்திற்கும் அமைக்கப்பட வேண்டும்.

   ஆ. அத்தோடு தேவையான பாலங்கள், சாக்கடை வடிகால் துப்புரவு வசதி, தெருவிளக்கு ஆகிய வசதிகள் நிர்வாக அதிகாரியின் கருத்திற்கேற்ப மனுதாரர் அமைத்து தர வேண்டும்.

   இ. நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும், நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

   ஈ. அங்கீகரிக்கப்பட்ட இம்மனைப்பிரிவில் உத்தேசிக்கப்பட்டுள்ள சாலைகளை மனைப்பிரிவு விண்ணப்பதாரர் / உரிமையாளர் முறையாக அமைத்து அல்லது அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி சம்பந்தப்பட்ட நகராட்சி மன்றத்திற்கு உரிய படிவத்தில் பதிவு செய்து பொதுச் சாலையாக பாராமரிக்க, நகராட்சி ஆணையருக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

   உ. மேற்படி சாலைகளை, பொதுச் சாலையாக சர்வே காலங்களில் வரையறை செய்வதற்கான உட்பிரிவு கட்டணத் தொகையை பெறும் வகையில் பத்திரத்தில் மனுதாரரின் கையொப்பம் பெறப்பட வேண்டும்.

2. இருசாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகை விடவோ. வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.

4. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதில் கடை, பண்டகச் சாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது. பொது வசதிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள்யாவும், அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும், அந்த இடங்களை ஒதுக்கப்பட்ட உபயோகத்திற்காக நில அளவு ஆவணங்களில் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும்.

5. விரிவு அபிவிருத்தித் திட்டப் பகுதிக்குள் அமையும் மனைப்பிரிவு எனில், திட்ட விதிகளின்படி, குடியிருப்பு மனையில் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும், ஒரு பக்கம் இணைந்து வீடுகள் அனுமதிக்கப்பட்ட மனையில் ஒரு பக்கம் இணைந்த வீடுகளே கட்டப்பட வேண்டும், இதற்கு மாறாக எக்காலத்திலும் தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவினையோ அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் பயன்படுத்தக் கூடாது.

..2..

6. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு, வரைபடத்தில் காட்டியுள்ளவாறு, கட்டிட வரம்பு விடப்பட வேண்டும், மனைப்பிரிவில் அமையும் 7.2 மீட்டர் (24 அடி) வரை உள்ள சாலைகளுக்கு 1.50 மீட்டரும் (5 அடி), 7.2 மீ முதல் 12 மீ வரை அகலமுள்ள சாலைகளுக்கு 3.0 மீட்டரும் (10 அடி), 12 மீட்டருக்கு (40 அடிக்கு) மேல் 30.5 மீட்டர் (100 அடி) அகலம் உள்ள சாலைகளுக்கு 4.5 மீட்டர் (15 அடியும்), 30.5 மீட்டர் (100 அடி) அகலத்திற்கு மேற்பட்ட சாலைகளுக்கு, 6 மீட்டர் (20 அடி) அகலமும் கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். நகராட்சி கட்டிட விதிகளின்படி, மனையின் எல்லைக்கும் கட்டிட வரம்பிற்கும் உட்பட்ட நிலப்பகுதியில் தெருவின் உயர் மட்டத்திலிருந்து 1.8 மீட்டர் (6 அடி) மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகளின்படி, 2.4 மீட்டர் (8 அடி) உயரத்திற்கு மேற்படாத சுற்றுச் சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்தவித கட்டிடமோ, சுவரோ கட்டுதல் கூடாது.

7. மனையின் பக்க எல்லைக்கும், கட்டிடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும், குறைந்தது 1.5 மீ அளவுகள்ள திறந்தவெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது, 3 மீ திறவெளி விடப்பட வேண்டும். 10 மீ வரை மனையின் அகலம் உடைய மனைகளுக்கு பக்கத் திறவெளி ஒரு பக்கத்திலாவது குறைந்தது 1.5 மீ விடப்பட வேண்டும்.

8. ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும், கட்டிடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது, 3 மீ அளவுகள் திறந்தவெளி இருத்தல் வேண்டும். இந்தப் பின்பக்கத் திறவெளியில் கிணறு, கழப்பறை, எருக்குழி, மாட்டுத் தொழுவம், உந்துவண்டி நிறுத்தம், கொட்டகை போன்றவை அல்லது அவை போன்ற குடியிருப்பு அல்லது ஆனால் அதைச் சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே அமைக்கப்படலாம், ஆனால், கட்டிடங்கள் மொத்தமாக பின்பக்க எல்லையின் நீளத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும் மனையின் பின்பக்க நில மட்டத்திலிருந்து 3 மீட்டர் / 3.75 மீட்டர் உயரத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

9. விரிவு அபிவிருத்தித் திட்டப் பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில், திட்ட விதிகளின்படி, மனையின் பரப்பில் 50 அல்லது 67 விழுக்காட்டிற்கு மேல் கட்டிடம் கட்டப்படக் கூடாது. கட்டிடம் விடப்படும் திறந்தவெளியினை தோட்டமாகவோ, திறந்த முற்றமாகவோ தனிப்பட்ட பயன்பாட்டிற்காகவோ துப்புரவாக பராமரித்தல் வேண்டும்.

10. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

11. கடைக்கால் (Foundation) போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமம்படுத்தவோ, நிலச்சரிவை சரி செய்யவோ, மனையிலிருந்து மண் தோண்டி எடுத்து பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்துதலோ கூடாது.

12. 9 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்தது 9 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.

13. மனுதாரர் மனைப்பிரிவு தொடர்பாக, உறுப்பினர் செயலர் / நகராட்சி ஆணையரிடமிருந்து ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் நகராட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

14. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபேயாகத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

15. கோவில், தேவாலயம், மசூதி ஆகியவற்றிக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம் / இடங்கள் வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்யப்பட வேண்டும், இதனை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்,

16. பூங்கா, சிறுவர் விளையாடுமிடம், திறவிடம் போன்றவைகளுக்காக ஒதுக்கப்பட்ட மனைகளை, வட்டாட்சியர் அலுவலகத்தில் உட்பிரிவு செய்து, நகராட்சியிடம் தானமாக ஒப்படைக்க வேண்டும்.

..3..

17. மனையின் ஊடே, குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின் கம்பிப் பாதை / தந்திக் கம்பிப்பாதை அமைந்தால், கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றியமைக்க வேண்டும்.

18. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைக்குட்படுவதாக எழுத்து மூலம் நகராட்சி ஆணையாளர் உடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகளை தொடர்புடைய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துக் கொள்ள வேண்டும். மனைகள் விற்க்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும், மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டுத்தான் செய்யப்பட வேண்டும். மனைகள் விற்பவரையும், வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில், மேற்படி நிபந்தனைகளை விற்பனைப் பத்திரங்களின் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.

19. அ. மேற்படி, மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் தொழில் நுட்ப ஒப்புதல் (Technical Approval) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால், மனைப்பிரிவிற்கான இடஉரிமைத் தொடர்பாக, வில்லங்கம் ஏதேனும் இருப்பின் நகராட்சியினால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ. தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம்-1978, நடைமுறையில் உள்ள இடத்தில் மனைப்பிரிவு அமைந்தால், மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்புடைய உச்சவரம்புச் சட்ட அதிகாரிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

இ. மனைப்பிரிவு இடம் 1984ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப் பிரிவு 4(1)-ன்படி பிரகடனம் செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றி பரிசீலனை செய்யபின்னரும் நில உச்சவரம்புச் சட்டம்-1978 மற்றும் நிலச் சீர்திருத்தச் சட்டம்-1961 தொடர்பான விதிமுறைகளை நிறைவு செய்வதற்காக, திருவள்ளூர் நகராட்சி, ஆணையாளர் மன நிறைவு அமைந்த பின்னரேதான், மனைப்பிரிவிற்கு நகராட்சி மன்றத்தில் ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஈ. மேற்படி, மனைப்பிரிவிற்கு உள்ளூர் திட்டக் குழுமம் / நகராட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும் போது, அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும்.

உ. மேலும், மேற்படி சட்டங்களின்படி, நில ஆர்ஜிதம் சம்பந்தமாக நில ஆர்ஜிதப் பட்டியல் (Land Plan Schedule) எதுவும் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை என்பதனையும், மன நிறைவு அடைந்த பின்னரேதான், மனைப்பிரிவிற்கு, உறுப்பினர் செயலர் / ஆணையாளர், திருவள்ளூர் உள்ளூர் திட்டக் குழுமம் / நகராட்சி ஒப்புதல் அளிக்க வேண்டும்.

20. மனுதாரர், **உறுப்பினர் செயலர் / ஆணையர், திருவள்ளூர் உள்ளூர் திட்டக் குழுமம் / நகராட்சி** அவர்களிடமிருந்து, வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன், மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்றத் தீர்மான எண்ணும், நாளும் மன்றத்திற்கும், மனுதாரருக்கும் ஒப்பந்தமான நாளும் எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு, அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

21. தமிழ்நாடு வீட்டு வசதி மனைப்பிரிவின்படி, மனையின் பரப்பு, 110 சதுர மீட்டருக்கு குறைவாக இருந்தால் கட்டிட விதிகள் மட்டுமே பொருந்தும்.

..4..

22. நில வங்கி என்று ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை, அரசாணை எண்.[illegible], வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 14.12.2009-ன்படி, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட வேண்டும்.

23. மறுதாயர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி, நில உரிமை குறித்து பரிசீலிக்கப்பட்டுள்ளது எனவே, உண்மையான நில உரிமை இல்லாத இந்த நிலையில், மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்தினால், எந்த உரிமையும் கோரவோ அல்லது பதிவுசெய்யவோ எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

24. நில உரிமை குறித்து வழக்குகள் சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவைதானா என அறியப்பட்டு, அதன் அடிப்படையில் மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்டு, தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்படுவதால், பாதிப்பு ஏற்படாத வகையில் தடையின்மை சான்றுகள், மனைப்பிரிவு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல், எல்லைக் கல்லை நிர்ணயித்தல், நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் இரத்து செய்யப்படும்.

25. இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபட நகல்கள், பொதுமக்கள் பார்வைக்கு, சமர்ப்பிக்கப்பட்ட இந்த நகலில், 6 அடி x 4 அடி என்ற அளவுக்கு குறையாமல் கான்கிரீட் கல்லில் வைத்து வைக்கப்பட வேண்டும்.

26. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு, மனைகள் வாங்கும் ஒவ்வொரு பயனாளருக்கும் மனைப்பிரிவு வரைபட நகல் வழங்கப்பட வேண்டும்.

27. உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை, உள்ளாட்சியின் பயன்பாட்டு மாற்றம், மருவாய் துறை, சர்வே எண் உட்பிரிவுகள் செய்வது, அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே, உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விவரம்

ஒதுக்கீடு விவரம்		அளவுகள்	விழுக்காடு
மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	--	0.60 ஏக்கர் (26136 ச.அடி)	--
கோரிய மனைகள்	--	16	--
ஒதுக்கிய மனைகள்	--	16	--
உள்ளாட்சிக்குரிய பொது ஒதுக்கீடு இடம்	--	160 ச.அடி	0.78%
மின்வாரியத்திற்குரிய பொது ஒதுக்கீடு இடம்	--	158 ச.அடி	0.77%
விற்பனைக்குரிய பகுதி கலை	--	316 ச.அடி	1.21 %

உண்மை நகல்

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
திருவள்ளூர் மண்டலம்.

9/7/2020

ஆணையர்
திருவள்ளூர் நகராட்சி

9.7.20

70

திருவள்ளூர் நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை :- திரு.ப.சந்தானம்,பி.காம்.,

நா.க.எண்.4083/2019/எப்1, நாள்.30.07.2020

பொருள் : மனைப்பிரிவு – திருவள்ளூர் நகராட்சி – புங்கத்தூர் கிராமம் – சர்வே எண். 607/4 (வார்டு எண்.B, பிளாக் எண்.17, ந.அ.எண்.12/3Apt)–ல் 0.60 ஏக்கர் பரப்பளவு இடத்தில் – குடியிருப்பு மனைப்பிரிவு அமைத்துக்கொள்ள இறுதி உத்திரவு வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : 1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.3008/2019/திவம2, நாள்.26.02.2020.
2. உள்ளூர் திட்டக்குழும தீர்மானம் எண்.174, நாள்.20.05.2020.
3. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம் அவர்களின் செயல்முறை ந.க.எண்.3008/2019/திவம2, நாள்.09.07.2020.

@@@@@

உத்தரவு:-

பார்வை 3–ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம், திருவள்ளூர் அவர்களின் தொழில்நுட்ப உத்திரவில், இந்நகராட்சிக்குட்பட்ட புங்கத்தூர் கிராமம் நில அளவை எண். 607/4 (வார்டு எண்.B, பிளாக் எண்.17, ந.அ.எண்.12/3Apt)–ல் 0.60 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு ம.வ./ந.ஊ.உ.இ.(திவம) எண்.59/2020 என எண்ணிடப்பட்டு சில நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 1–ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம், திருவள்ளூர் அவர்களின் சாலை அமைப்பு வரைபடம் மற்றும் கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும் நகராட்சி பொறியாளரின் 20.03.2020–ந் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளபடியும் மனுதாரர் அடிப்படைவசதிகளுக்கான கட்டணங்களையும் செலுத்தியுள்ளார். மேலும் மனுதாரர் மனைப்பிரிவில் அமையும் 5719ச.அடி இடத்தினை சாலைகளுக்காகவும் மற்றும் 160 ச.அடி இடத்தினை உள்ளாட்சிக்குரிய பகுதியாகவும், இந்நகராட்சியின் ஆணையர் பெயருக்கு தானமாக திருவள்ளூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர எண். 3801/2020 மூலம் பத்திரபதிவு செய்து அசல் பத்திரத்தினை இந்நகராட்சியில் சமர்ப்பித்ததை தொடர்ந்து, பார்வை 2–ல் கண்டுள்ள உள்ளூர் திட்டக்குழும தீர்மான எண்.174, நாள்.20.05.2020–ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மனுதாரரால் இந்நகராட்சியில் செலுத்தப்படவேண்டிய மனைப்பிரிவுக்கு உண்டான உரிய கட்டணங்களையும் செலுத்தியுள்ளார்.

.....2

18

எனவே நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம், திருவள்ளூர் அவர்களின் தொழில்நுட்ப உத்திரவில் தெரிவித்துள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனைப்பிரிவு அமைத்துக்கொள்ள இதன் மூலம் உத்திரவு அளிக்கப்படுகிறது. மேலும் தவரான ஆவங்கள் சமர்ப்பிக்கப்பட்டு இவ்வுத்திரவு பெறப்பட்டு இருப்பின் நிபந்தனை இன்றி மனைப்பிரிவு அனுமதியின்றி ரத்து செய்யப்படும் எனவும் இதன் அறிவுறுத்தப்படுகிறது.

ஆணையர், 31/7/20
திருவள்ளூர் நகராட்சி.


31/7/2020

இணைப்பு :

1. வரைபடம்
2. நிபந்தனைகள்

பெறுநர் :
திரு.R.சிவக்குமார்,
எண்.23, காமராஜர் சாலை,
திருவள்ளூர்.

நகல் :
நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
திருவள்ளூர் மண்டலம், திருவள்ளூர்.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals


Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate